People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 10.05.2009 முதல் 16.05.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 240. | 10.05.09 | **கடலூர் மாவட்டம்:** என்.எல்.சி முதல் அனல்மின் நிலைய செடக்னிசியன் பிரகாஷ் மகன் அஸ்வின் (8). 8 வயதுடைய அஸ்வின் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் நடந்த விபத்து காரணமாக சென்னை மியாட் மருத்துவமனையில் காலில் பிளேட் மாற்றப்பட்டது. இது தற்பொழுது முழுமையாக குணமுற்றதால் காலில் வைத்த பிளேட்டை நீக்க என்.எல்.சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காலில் இருந்த பிளேட் நீக்கப்பட்ட சிறிது நேரத்தில் அஸ்வின் இறந்தார். | தவறான சிகிச்சை | தினமலர் |
| 241. | 10.05.09 | **மதுரை மாவட்டம்:** மகாத்மாகாந்திநகர் பவானி தெருவைச் சேர்ந்த டேனியல் மனைவி செல்வி. கடன் தொல்லை காரணமாக கணவன், மனைவி, இருவரும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தீக்கதிர். |
| 242. | 11.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே குழிவேல்பட்டியைச் சேர்ந்த ராமர் மனைவி கீதா. ராமரும், இவரது தம்பி மணிவண்ணனும் துபாயில் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் மணிவண்ணன் ஊர் திரும்பியவர் அண்ணி சித்ராவிடம் பணம் கேட்டு மிரட்டியுள்ளார். இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனிடையில் சித்ரா மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 243. | 11.05.09 | **சென்னை மாவட்டம்:** அண்ணாநகரில் வசிக்கும் அனிதாவின் உறவுக்கார பெண்ணான டெல்லியை சார்ந்த கல்பான, அணு இருவர்களை மர்ம கும்பல் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்து ரூ. 20 லட்சம் கேட்டு மிரட்டியுள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 244. | 11.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** முனியசாமிகோயில் தெருவைச் சேர்ந்த இராஜேந்தின் மனைவி நாகலட்சுமியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இது பற்றி நாகலட்சுமி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 245. | 11.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** மக்களைத் தொகுதியில் தி.மு.க வேட்பாளரை எதிர்த்து போட்டியிடும் தமிழர் விடுதலை அமைப்பின் | | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேட்பாளர் வழக்குரைஞர் பொன்ராசு மற்றும் அவருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து வழக்குரைகர்களையும் தி.மு.கவினர் கல் வீசி தாக்கினர். இந்த மோதல் தொடர்பாக இணைக்கப்பேச்சு நடத்தச் சென்ற வழக்குரைஞர்களை திமுக மாவட்ட செயலாளர் பெரியசாமி சாதி பெயரைச் சொல்லி திட்டியதாக கூறப்படுகிறது. | | |
| 246. | 11.05.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** மயிலாடுதுறை வட்டம், குத்தாடும் அருகில் உள்ள முருகமங்கலம் நடுத்தெருவைச் சேர்ந்த இராசதுறையின் மகள் திவ்யா மயிலாடுதுறை ஞானாம்பிகை அரசினர் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்து வருகிறார். பெற்றோரை அழைத்து வர வேண்டும் என கல்லூரி உத்தரவிட்டதால் அச்சம் அடைந்த திவ்யா உடலில் மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். | கல்லூரி மாணவி தற்கொலை | தமிழ்ஓசை |
| 247. | 12.05.09 | **மதுரை மாவட்டம்:** குப்பிநாயக்கன்பட்டி மருதுபாண்டியர் வீதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மனைவி சரஸ்வதி மகள் பிரியா. 23 வயதுடைய பிரியாவும் அப்பகுதியைச் சேர்ந்த பாத்திபனும் காதலித்துள்ளனர். இக்காதலை பெற்றோர் எதிர்துள்ளனர். இதனால் இருவரும் பெற்றோர் எதிர்ப்பை மீறி கடந்த 3 மாதத்திற்கு முன் திருமணம் செய்து கொண்டு தனியாக குடும்பம் நடத்தியுள்ளனர். இந்நிலையில் சம்பவத்தன்று பிரியா தூக்கில் பிணமாக தொங்கினார். இது பற்றி சரஸ்வதி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்சுடர் |
| 248. | 12.05.09 | **மதுரை மாவட்டம்:** சேக்கிப்பட்டி கருப்பையாநகர் பகுதியைச் சேர்ந்த சுரேஷ்குமார் மனைவி கவிதா. இருவருக்கும் சில ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் சுரேஷ்குமார் எதிர் வீட்டில் இருக்கும் லதாவை ரகசியமாக காதலித்து ஊரை விட்டு ஓடியுள்ளனர். இது பற்றி கவிதா தந்தை போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்சுடர் |
| 249. | 12.05.09 | **மதுரை மாவட்டம்:** நாகமலைப்புதுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த மாகமுனி மகள் திவ்யாவை வீட்டு வேலை சரியாக செய்யவில்லை என பெற்றோர் கண்டித்துள்ளனர். இதனால் மனமுடைந்த திவ்யா மண்ணெைய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 250. | 12.05.09 | **மதுரை மாவட்டம்:** தும்பைப்பட்டி அம்பலகாரன்பட்டியை சேர்ந்த ஜெயசக்திவேல் மனைவி தேவிகாவை அடித்து உதைத்து சித்ரவதை செய்துள்ளார். இந்நிலையில் குடிப்பதற்காக மனைவி நகைகளை எடுத்து சென்று விற்றுள்ளார். இதனால் மனமுடைந்த தேவிகா மண்ணெணணைய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 251. | 12.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள சிந்துபட்டி போலீஸ் சரகம் பி. வாகைக்குளம் கிராமத்தை சேர்ந்த மகள். பி. வாகைக்குளத்தைச் சேர்ந்த சிவக்குமார், மணிமாறன் இடையே நிலத்தகராறு காரணமாக பிரச்சனை இருந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று இது கோஷ்டி மோதலாக மாறியதில் 12 பேர் காயம் அடைந்துள்ளனர். | கோஷ்டி மோதல் | தினத்தந்தி |
| 252. | 12.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** சிவகிரி தாலுகா இனம் கோவில்பட்டி கிராமம் அருந்ததியர் தெருக்கலில் கழிவுநீர் விட்டும், முள்வேலி அமைத்தும் தீண்டாமை சித்ரவதை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | கணேசன் RMA |
| 253. | 12.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செஞ்சி தாலுகா, மேலப்பள்ளிப்பட்டி, கொல்லக் கொட்டாய் பகுதியை சேர்ந்த +2 மாணவி அமுதா. அமுதா எதிர் வீட்டு தனியார் பள்ளி வார்டன் பரமசிவம் அமுதாவை அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | பாஸ்கர், RMA |
| 254. | 12.05.09 | **வேலூர் மாவட்டம்:** ஒடுக்கத்தூர் அடுத்த குமிக்கல் கிராமத்தை சேர்ந்த கோவிந்தன் கொலை முயற்சியால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர். திடீரென்று மயங்கி கீழே விழுந்தவர். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் இறந்தார். இது பற்றி காகாயம் காவல் நிலையத்தில் புகார். | சிறை கைதி மரணம் | பாஸ்கர், RMA |
| 255. | 13.05.09 | **ஈரோடு மாவட்டம்:** மொடக்குறிச்சி, எழுமத்தூர், பாரதிநகர் சேர்ந்த பழனிச்சாமி மகள் தீபாவை பள்ளி கணித ஆசிரியர் பால்ராஜ் வேப்பங்குச்சியால் அடித்ததில் மாணவி ஈரோடு மருத்துவமனையில் அனுமதி. | வகுப்பறை வன்முறை | பெருமாள், RMA |
| 256. | 13.05.09 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலைபேட்டை வட்டம், அண்ணாகப்பாளையம் சேர்ந்த சரவணன், செந்தில்குமார், பிரகாஷ் வன்னியர் சமூகத்தை த சேர்ந்த மக்களுக்கும், அருந்ததியர் மக்களுக்கும் பள்ளியில் கொட்டு அடிப்பதில் ஏற்பட்ட பிரச்சனையில் வன்னியர் சமூகத்தினர், அருந்ததியர் மக்களை தாக்கியுள்ளனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 257. | 13.05.09 | **தேனி மாவட்டம்:** தேனியில் இரவு வாக்காளர்களுக்கு பணம் வழுங்க முயற்சி செய்த போது எம்.எல்.ஏ எஸ் லெட்சுமணணை அ.தி.மு.க.வினர் சிறைப்பிடித்தனர். ஆனால் போலீஸ் அவரை மீட்டுச் சென்றதோடு அ.தி.முக. நிர்வாகிகள் மீது தடியடி நடத்தி விரட்டி அடித்தனர். | | தினமணி |
| 258. | 13.05.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** களியங்கா–விளை சந்திப்பு பகுதியில் ஊர்தி ஆய்வு மேற்கொண்ட போது அப்போது அந்த வழியாக வந்த மணல் லாரிகளை தடுத்து நிறுத்தி ஆய்வு செய்த போது பல்வேறு பகுதிகளுக்கு மணல் எடுத்து செல்வதற்கான போலி உரிமங்களை வைத்து கொண்டு கேரள மாநிலத்திற்கு மணல் கடத்த முய்னற இரண்டு லாரிகளை போலீசார் கைப்பற்றினர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 259. | 14.05.09 | **மதுரை மாவட்டம்:** எல்லீஸ்நகர் பகுதியைச் சேர்ந்த முத்துலட்சுமியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் அதிக வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தி உள்ளனர். இது பற்றி முத்துலட்சுமி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணை கொடுமை | தினத்தந்தி |
| 260. | 14.05.09 | **சென்னை மாவட்டம்:** இரண்டு வாக்குச் சாவடிகளில் தி.மு.க வேட்பாளர் தயாநிதி மாறன் தமது ஆதரவுகளோடு விதிமுறைகளை மீறிச் சென்று அத்து மீறலில் ஈடுபட்டார். இதற்கு அ.தி.மு.கவினர் எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. காவல் துறையில் அ.தி.மு.கவினர் மீது தடியடி நடத்தினார்கள். | | தமிழ்ஓசை |
| 261. | 14.05.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** ஆரல்வாய்மொழி அருகே கண்ணன் புதூரைச் சேர்ந்த 12ம் வகுப்பு மாணவி. அப்பகுதியைச் சேர்ந்த ஐ.டி.ஐ மாணவர் லட்சுமணனை காதலித்துள்ளார். இந்நிலையில் இக்காதலை பெற்றோர் எதிர்த்ததால் இருவரும் எறும்பு பொடி குடித்து தற்கொலைக்கு முயற்சிதுள்ளனர். இதில் மாணவி உயிரிழந்தார். மாணவன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 262. | 14.05.09 | **நாமக்கல் மாவட்டம்:** சந்திரசேகரபுரம் கிராமத்தைச் சேர்ந்த தலித் மக்கள் வாக்குபதிவு செய்ய சென்ற போது அப்பகுதியினர் அடித்து தாக்கியுள்ளனர். இதில் தலித் மக்கள் மருத்துவமனையில் அனுமதி. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | செந்தில், RMA |
| 263. | 14.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே நாச்சியார்பட்டியைச் சேர்ந்த முனியாண்டி மனைவி முருகலட்சுமிக்கும் கணவர் முனியாண்டியின் சித்தப்பா மகன் கிருஷ்ணசாமியுடன் கள்ளத் தொடர்பு | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைத்துள்ளார். இதனால் கணவன் மனைவிடையே அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த முனியாண்டி முருகலட்சுமியை அரிவாளால் சரமாரியாக தாக்கியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | | |
| 264. | 14.05.09 | **மதுரை மாவட்டம்:** பனையூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் முத்துக்காளை. கள்ளம்பூர் கிளியன் என்பவருடைய செங்கல் சூளையில் கொத்தடிமையாக இருந்தவர். அமைப்புகளின் உதவியுடன் வெளிவந்து தற்பொழுது கூலி வேலை நடத்தி வருகிறார். இந்நிலையில் செங்கல் சூளை உரிமையாளர் முத்துக்காளையை கொலை மிரட்டல் விடுத்துள்ளார். | கொத்தடிமை | |
| 265. | 15.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் வடக்கு வட்டாரம் போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றும் சரஸ்வதி கணவர் தாமோதரன். போக்குவரத்து அலுவலகத்தில் வியாழக்கிழமை ஊழல் தடுப்பு பிரிவு போலீசார் அதிரடிச் சோதனை நடத்தியதில் கணக்கில் வராத பணத்தை போலீசார் கைப்பற்றினர். | லஞ்ச ஊழல் | தினமணி |
| 266. | 15.05.09 | **மதுரை மாவட்டம்:** கீழவளவு அருகில் உள்ள கொங்கம்பட்டியில் ஊராட்சி தலைவர் அன்வர் மற்றும் முஸ்தபா. கொங்கம்பட்டியில் டீ கடை வைத்திருக்கும் முத்துமுகமது நேற்று முன்தினம் தீ பிடித்து எரித்து போனது. இது தொடர்பாக ஊராட்சி தலைவர் அன்வர் மற்றும் முஸ்தபா மீது சீமவளவு போலீசில் புகார் செய்தார். புகாரின் அடிப்படையில் ஊராட்சி தலைவரை விசாரணைக்கு அழைத்து சென்றனர். இதனால் 40க்கும் மேற்பட்டோர் பொய் புகாரின் பேரில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் விசாரணைக்கு அழைத்து சென்றனர். அவர்கள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இது பற்றி போலீசில் புகார். | | தினமலர் |
| 267. | 15.05.09 | **சேலம் மாவட்டம்:** புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள குப்தாநகரில் நேற்று காலை ஒரு பெண் குழந்தை கொலை செய்யப்பட்டு சாலையில் கிடந்தது. காவல்துறையினர் குழந்தையின் உடலைக் கைப்பற்றி விசாரிப்பு. | பெண் சிசு கொலை | தமிழ்ஓசை |
| 268. | 15.05.09 | **கடலூர் மாவட்டம்:** சிதம்பரத்தை அடுத்த ஆரூர் புதுத்தெருவைச் சேர்ந்த பிரகாசின் மனைவி மீனா மகள் அஜந்தாவுடன் கணவனை பிரிந்து வாழ்ந்து வருகிறார். அஜந்தா சி. முட்லூர் அரசுக் கலைக்கல்லூரியில் பி.பி.ஏ 2ம் ஆண்டு படித்து வந்தார். அஜந்தா பூச்சிக்கொல்லி மருந்தை குடித்தார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்–ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ பலனின்றி உயிரிழந்தார். | | |
| 269. | 15.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் சாப்டூர், போலீஸ் சரகம் அத்திப்பட்டியைச் சேர்ந்த லட்சுமணபெருமாள் மகள் ராஜேஸ்வரி. அத்திப்பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் +2 படித்து வந்தார். +2 தேர்வில் தேர்ச்சி பெறாததால் மனமுடைந்து மண்ணெணைய் ஊற்றி தீ வைத்துக் கொண்டு. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 270. | 15.05.09 | **மதுரை மாவட்டம்:** போலீஸ் தலைமைக் காவலர் ரமா தேர்தல் பணிக்காக டி.கல்லுப்பட்டி அருகே உள்ள பேரையூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த வெற்றிச்செல்வன் ரமாவை மானபங்கம் செய்துள்ளார். இது பற்றி ரமா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 271. | 15.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி பாலசமுத்திரம் அருகேயுள்ள குரும்பட்டியில் தலித் அருந்ததியரைச் சேர்ந்த கிட்டான். டீக்கடையில் உள்ள பெஞ்சில் அமர்ந்து டீ குடித்துக் கொண்டிருந்த பொழுது அப்பகுதியைச் சேர்ந்த ஆதிக்க வெறியர்களான மாரிமுத்து,. குமரேசன், கிட்டானைப் பார்த்து மிகவும் இழிவாக திட்டியவாறே எட்டி உதைத்து, அடித்து அராஜகத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பழனி தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார் செய்த போது பெட்டி கேசாக பதிவு செய்துள்ளனர். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | சதிஸ், RMA |
| 272. | 15.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** விருதநகர் தாலுகா வச்சகாரப்பட்டி காவல் நிலையத்திற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த திரவியர் மகன் ரஞ்சித்குமார் என்பவரை அவ்வூர் தேவர் சாதியைச் சேர்ந்த சுப்ரமணியன் மகன் ரவிக்கண்ணன் மற்றும் நடராஜ் ஆகியோர் மேற்படி ரஞ்சித்தை சாதி பெயர் சொல்லி திட்டியதுடன் கம்பால் அடித்து சட்டையை பிடித்து கிழித்து கேட்ட வார்த்தைகளால் திட்டியுள்ளார். காவல் நிலையத்தில் 13.05.09 புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் மேற்படி நபரின் மீது வழக்கு போட முயற்சி. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | முனியராஜ் RMA |
| 273. | 15.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி தாலுகா, சிவநத்தம் தாழ்த்தப்பட்ட மக்களை நாடார் சாதியினர் அடித்து சித்ரவதை. சிவகாசி நகர் காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மீது பொய் வழக்கு. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | முனியராஜ் RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 274. | 15.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சூழி நாடார் மேல்நிலைப்பள்ளி மாணவி கூட்டாக பாலியல் சித்ரவதை. | பெண்கள் மீதான வன்முறை | முனியராஜ் RMA |
| 275. | 15.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** திருநெல்வேலி மாநகராட்சி அலுவலத்தில் பணிபுரியும் தலித் பெண்மணி வேலம்மாளை மாநகராட்சி அதிகாரி சாதி கூறித்து இழிவாக பேசியும் பணி செய்ய விடாமல் இடையூறு. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | S. கணேசன் RMA |
| 276. | 16.05.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** வைகுண்டபுரம் தெருவில் நேன்று முன்தினம் இரவு சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த தள்ளு வண்டியில் பிறந்து 5 நாட்களே ஆன பெண் குழந்த அனாதையாக கிடந்தது. இது பற்றி போலீசில் புகார். | பெண் சிசு | தினமலர் |
| 277. | 16.05.09 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி, சின்னாம்பாளையத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் (30) ஆட்டோ டிரைவரான ஈஸ்வரன் ஸ்டேண்டில் ஆட்டோவை நிறுத்தி கொண்டிருந்த போது பொள்ளாச்சி பகுதியில் இருந்து வேகமாக வந்த கார் ஒன்று ஆட்டோவில் மோதியது. இதில் 500 கிரோ ரேசன் அரிசி கடத்தப்பட்டது தெரிய வந்ததது. | ரேசன் அரிசி கடத்தல். | தீக்கதிர் |
| 278. | 16.05.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டு வட்டம், காமராஜர் நகரைச் சேர்ந்த டேவிட் தம்பி அந்தோணி கனகராஜ் (38) பாதரியார். இவர்கள் தனியார் பள்ளி நடத்து வந்துள்ளனர். இப்பள்ளியில் 56 மாணவிகளை அமைத்து மாமல்லபுரம் சென்ற போது சென்னையில் வேலை பார்க்கும் ஈரோடுச் சேர்ந்த லோகநாதன், பார்த்தீபன், விக்டர் கிண்டல் செய்துள்ளனர். இதை தட்டிக்கேட்ட டேவிட் மற்றும் அந்தோணிக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் அந்தோணியைக் குத்தி கொலை செய்துள்ளார். | கொலை | பிரகாரன் RMA |
| 279. | 16.05.09 | **மதுரை மாவட்டம்:** இளையான்குடியைச் சேர்ந்த சிக்கந்தர் மனைவி நூர்ஜஹானுக்கு 4 குழந்தைகள் உள்ளது. 5 வதாக பெண் குழந்தை பிறந்தது. இதை ஆஸ்பத்திரியிலேயே விட்டு விட்டு சென்றுள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | பெண் சிசு | தினகரன் |
| 280. | 16.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் சேர்ந்த பிச்சை ஆயதுப்படை போலீஸ்காரரான பிச்சை அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு பஸ்சில் ஏறி பெண்களிடம் சில்மிஷம் செய்துள்ளார். இதனால் அப்பகுதியில் பிச்சை அடித்து உதைத்துள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 281. | 16.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்துரையடுத்த மாயழகனூரைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் அஞ்சுகம். எரியோடு அரசு | பள்ளி மாணவி தற்கொலை | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேல்நிலைப்பள்ளியில் +2 படித்து வந்துள்ளார். +2 பொதுத் தேர்வில் ஒரு மதிப்பெண் குறைவால் தேர்ச்சி பெறவில்லை. இதனால் மனமுடைந்தவர் அரசு விதைக்குடித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 282. | 16.05.09 | **கடலூர் மாவட்டம்:** தூக்கனாம்பாக்கத்தை அடுத்த திருப்பனாம்பாக்கத்தை சேர்ந்த மணிவேல் மகள் பானுப்பிரிசித்தரியா. 10ம் வகுப்பு முடித்து தேர்வு முடிவுகளுக்காக காத்திருக்கும் பானுப்பிரிசித்திரியாவை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் தேர்வில் தோல்வி அடைந்ததாக கூறி கிண்டல் செய்துள்ளனர். இதனால் மனமுடைந்த பானு மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்